**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 34/2012 P.W.4 /L.W. 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **me** | **:** | **திரு. சுனில் ராம்** | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | த/பெ. கிருஷ்ணன் | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.05.2023**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். சுமார் 20 வருடங்களுக்கு முன்பு மாலை நேரம் கருங்கல் மார்க்கெட் அருகில் உள்ள குமார் ஜீவல்லரி அருகில் போலீசார் சம்பவ இடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் முதலாவதாக நான் கையெழுத்து செய்தேன். போலீசார் என்னை விசாத்துக்கொண்டார்கள்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை சம்பவம் நடந்த அன்று தான் விசாரித்தார்கள். அதன்பிறகு விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) நான் காவல் நிலையத்தில் வைத்து ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் வழக்கிற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.